2010 மே 10]

அவர்கள் மேட்டூரில் மீன்களைப் பாதுகாக்கின்ற வகையில் ஒரு குளிர்ப் பதன அறை வேண்டுமென்று ஏற்கெனவே கேட்டிருக்கின்றார். அரசு அதைப்பற்றி பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

159—

பால் பதப்படுத்துதல்

***102584—திரு. போ. சின்னப்பன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளத்தில் பால் பதப்படுத்தும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விளாத்திகுளம் தொகுதியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் ஏதும் தற்போது இயங்காத காரணத்தினால், விளாத்திகுளத்தில் பால் பதப்படுத்தும் நிலையம் அமைக்க தற்போது வாய்ப்பு ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் நகரம் தாலுகா தலைநகரமாகும். இந்த தாலுகாவைச் சுற்றி 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இந்தப் பகுதியில் பரவலாக மாடுகளை வளர்த்து பெருமளவில் பால் உற்பத்தி செய்கின்றார்கள். இங்கு அதிகமான பால் உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, விளாத்திகுளத்தில் பால் பதப்படுத்தும் நிலையம் அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2010 மே 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதி, திருநெல்வேலி ஒன்றியத்தை உள்ளடக்கிய, தூத்துக்குடி மாவட்டத்தை உள்ளடக்கிய பகுதிகள் அந்தப் பால் கூட்டுறவு ஒன்றியத்தில் அடங்கியிருக்கின்றன. அந்த ஒன்றியத்தில் மாத்திரம் 383 சங்கங்கள் இருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தளவு 44,346 லிட்டர் பாலும், தூத்துக்குடி மாவட்டத்தைப் பொறுத்தளவு 13,083 லிட்டர் பாலும் உற்பத்தி செய்யப்படுகிறது. இதிலே 6,908 லிட்டர் பால் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த விளாத்திகுளம் தொகுதியில் பால் உற்பத்தி செய்த பிறகும்கூட பெற்றுக்கொள்வதற்கான சங்கங்கள் ஏதும் இப்போது செயல்படவில்லை. ஆனால், தூத்துக்குடி மாவட்டம் நாசரேத் அருகில் பிடானேரி மற்றும் கோவில்பட்டி பகுதியில் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிவிப்பான்கள் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, இன்னும் ஒரு மாத காலத்தில் அந்தப் பணிகள் தொடங்க இருக்கின்றன. இப்படிப்பட்ட நேரத்தில், விளாத்திகுளம் தொகுதியில் புதிதாக சங்கங்கள் அமைக்கப்பட்டு பால் உற்பத்தி பெருக்கப்படுமேயானால்- நிச்சயமாக அந்தப் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்கு தற்போது வாய்ப்பில்லை-பால் குளிர்விப்பான்கள் நிச்சயமாக அமைத்துக் கொடுக்கப்படும் என்பதை உங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. போ. சின்னப்பன்.

திரு. போ. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதியில் எந்தத் தொழிற்சாலையும் இல்லை. வானம் பார்த்த கரிசல் பூமி அது. மழைக் காலங்களில் மட்டும்தான் விவசாயம் நடக்கும். பிற காலங்களில் வேலிக்கருவை மரங்களை வெட்டி கரி மூட்டம் போட்டுத்தான் பிழைப்பு நடத்தி வருகிறார்கள். எனவே, அங்கு ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தால் அதிகமான மாடுகளை வாங்கி, மாடு மேய்த்தாவது எங்கள் பகுதி விவசாயிகள் பிழைக்கலாம். எனவே, மீண்டும் ஒரு முறை தங்கள்மூலம் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

2010 மே 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாகிறபோது பாலை குளிரூட்டுவதற்காகத்தான் பால் குளிர்விப்பான்கள் அமைக்க முடியுமே தவிர, குளிர்விப்பான்களை அமைத்துவிட்டு பால் உற்பத்தியைப் பெருக்க முடியாது. நிச்சயமாக நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் 5-ஆவது முறையாக ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற இந்த நேரத்தில் பல்வேறுத் திட்டங்கள்மூலமாக ஏழை விவசாயிகளுக்கு கறவை மாடுகள் வழங்கக்கூடிய திட்டங்கள் இருக்கின்றன. அந்த அடிப்படையிலே விளாத்திகுளம் தொகுதியில் புதியதாக சங்கங்கள் அமைத்து பால் உற்பத்தியாளர்களுக்கு கறவை மாடுகளை வழங்கி நிச்சயமாக அந்தப் பகுதியில் ஒரு குளிர்விப்பான் அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 160, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

160—

தொழில் மையம்

***119037—திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பேரூராட்சியில் கதர் கிராமத் துறை சார்பாக தொழில் மையம் அமைத்து வேலைவாய்ப்பிற்கு வழி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பாக திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பேரூராட்சியில் தொழில் மையம் அமைத்திட தற்பொழுது சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.